வாக்குமூலம்

**திருவையாறு நீதித்துறை நடுவர் நீதிமன்றம்**

வழக்கு எண். STC 562/2021

வழக்கு சாட்சி- **பு.சா. 1**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | விஜயகுமார் | : | ஜாதி | |
| தந்தை பெயர் | தங்கவேல் | : | தொழில் | விவசாயம் |
| கிராமம் | கீழதிருப்பந்துறுத்தி | : | சமயம் | |
| தாலுக்கா | திருவையாறு | : | வயது | 57/2025 |

**நாள் : 24.01.2025**

நான் கீழதிருப்பந்துறுத்தியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். நான் சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். கீழ்கண்ட ஆவணங்களை எனது தரப்பு குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1) 30.11.2019 ம் தேதிய எதிரி எனக்கு வழங்கிய காசோலை அசல் **புகார்தாரர் தரப்பு சான்று ஆவணம்** 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2) 19,10,2019 ம் தேதிய எதிரி எனக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அசல் **புகார்தாரர் தரப்பு சான்று ஆவணம் 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3) 16.11.2019 ம் தேதிய மேற்படி அறிவிப்புக்கு புகார்தாரர் அனுப்பிய பதில் அறிவிப்பு அலுவலக நகல் **புகார்தாரர் தரப்பு சான்று ஆவணம் 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4) 06.02.2020 தேதிய காசோலை எதிரி வங்கிக் கணக்கிற்கு அனுப்பப்பட்டு, எதிரி அல்லது எதிரியின் வங்கியினை அனுகிட சொல்லி, (Contact Drawer/Draweee Bank) திரும்ப வந்துள்ளதற்கான எனக்கு வங்கி வழங்கிய குறிப்பாணை அசல் **புகார்தாரர் தரப்பு சான்று ஆவணம் 4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5) 04.03.2020 ம் தேதிய நான் எதிரிக்கும், அதன் நகல் எதிரியின் வங்கிக்கும் அனுப்பியதற்கான வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் **புகார்தாரர் தரப்பு சான்று ஆவணம் 5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6) 05.03.2020 ம் தேதிய மேற்படி அறிவிப்பு பதிவு தபாலில் அனுப்பப்பட்டதற்கான பதிவஞ்சல் ரசீதுகள் (2 எண்ணிக்கை) அசல் **புகார்தாரர் தரப்பு சான்று ஆவணம் 6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7) 06.03.2020 தேதிய எதிரியின் கணக்குள்ள பாரத ஸ்டேட் வங்கி அந்த அறிவிப்பினை பெற்றுக் கொண்டதற்கான ஆன்லைன் டெலிவரி அறிக்கை கணினி பதிவிறக்க நகல் **புகார்தாரர் தரப்பு சான்று ஆவணம் 7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8) 07.03.2020 ம் தேதிய எதிரி அந்த அறிவிப்பினை பெற்று கொண்டதற்கான ஆன்லைன் டெலிவரி அறிக்கை கணினி பதிவிறக்க நகல் **புகார்தாரர் தரப்பு சான்று ஆவணம் 8** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

9) 23.03.2020 ம் தேதிய எதிரி காலக்கெடு முடிந்து அனுப்பிய பதில் அறிவிப்பு (அஞ்சல் உறையுடன்) அசல் **புகார்தாரர் தரப்பு சான்று ஆவணம் 9** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மனுபடி தீர்ப்பாக பிரார்த்திக்கிறேன்.